**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண்.60/2019**

PW1 – திரு. மாரிமுத்து நாள். 11.01.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண். 24/2B ஆகும். தாவா சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 11 செண்ட் ஆகும். 1ம் பிரதிவாதி முத்துலெட்சுமி எனது அண்ணன் மனைவி என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 4 நபர்கள், அதில் 2 அண்ணன், 2 அக்கா ஆவார்கள். நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் சென்னையில். சென்னையில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் 10 வருட காலங்களாக வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கான கிரைய பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன்.

2. அசல் பத்திரம் எங்கு உள்ளது என்றால் சென்னையில் உள்ள ஈகியூடாஸ் வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் எவ்வளவு சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் 11 செண்ட் வாங்கப்பட்டது. தாவா சொத்தான 11 செண்டில் எனது சகோதரர் மாணிக்கத்திற்கு வாய்மொழியாக 7 செண்ட் இடத்தை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. தாவா சொத்தை

நானும், எனது சகோதரர் மாணிக்கமும் சேர்ந்து வாங்கினோம் என்றால் சரியல்ல, நான் மட்டும் தான் வாங்கினேன்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை